## வரையறுக்கப்பட்ட நஷனல் ஸ்கூல் ஒவ் பிஸினஸ் மனேஜ்மன்ட் கம்பனி – 2015

-----------------------------------------------------------------------------------------------------------

வரையறுக்கப்பட்ட நஷனல் ஸ்கூல் ஒவ் பிஸினஸ் மனேஜ்மன்ட் கம்பனியின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினையும் உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதும் மீளாய்வாண்டின் கம்பனியின் செயற்பாடுகள் தொடர்பாக எனது அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

--------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 அபிப்பிராயம்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வரையறுக்கப்பட்ட நஷனல் ஸ்கூல் ஒவ் பிஸினஸ் மனேஜ்மன்ட் கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 3. நிதி மீளாய்வு

## 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் கம்பனியின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 483,970,922 ஆன இலாபமொன்றாக இருந்ததுடன், இதற்கொப்பான முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 159,798,584 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 324,172,338 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் பாடநெறி கட்டணங்கள் ரூபா 360,760,251 ஆல் அதிகரித்தமை மற்றும் புதிய பாடநெறிகளுக்காக மாணவர்கள் பதிவு 5 சதவீதத்தினால் அதிகரித்தமை மேற்படி நிதி விளைவுகளின் அதிகரிப்பிற்கு பிரதான காரணங்களாக அமைந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றல்

கம்பனியினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் கல்லூரி ஆரம்பத்திலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை (பட்டப்பின் படிப்பு பாடநெறிகள் உட்பட) பாடநெறிகளுக்காக சமூகமளித்த மாணவர்களின் எண்ணிக்கை, வருமானம், செலவினம் மற்றும் மொத்த இலாபம் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|
| பாடநெறி வருமானம் ரூபா | 381,848,973 | 582,371,274 | 782,648,252 | 1,138,195,911 |
| நேர் செலவினம் ரூபா | 171,649,995 | 308,164,021 | 510,773,271 | 514361,234 |
| மொத்த இலாபம் ரூபா | 210,198,978 | 274,207,253 | 271,874,981 | 623,834,677 |
| மொத்த இலாபம் சதவீதமாக (நூற்றுக்கு) | 55.04 | 47.08 | 34.73 | 54.80 |
| விளம்பர செலவினம் ரூபா | 972,805 | 6,204,841 | 5,186,354 | 7,961,906 |
| பாடநெறிகளுக்காக சமூகமளித்த மாணவர்களின் எண்ணிக்கை | 2,212 | 2,364 | 1,979 | 2,080 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேற்படி தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ஆட்சேர்க்கப்பட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 101 மாணவர்களால் அதாவது 5.1 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 284 மாணவர்களால் அதாவது 12 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக விளம்பர செலவினம் ரூபா 2,775,552 ஆல் அதாவது 53.5 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும் மாணவர்கள் எண்ணிக்கை 101 மாத்திரமாக இருந்தது.

(இ) சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் கல்லூரி ஆரம்ப முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை 2,862 பட்டதாரிகளையும் 197 பட்டப்பின் படிப்பு பட்டதாரிகளையும் உருவாக்கியிருந்ததுடன் 719 பேர் பாடநெறிகளை விட்டுச் சென்றிருந்தனர்.

## 4.2 பதவியணியினர் நிர்வாகம்

மீளாய்வாண்டின் இறுதியில் கல்லூரியின் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை 55 ஆக இருந்த போதிலும், பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டதால் அவை தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | (i) ஆண்டின் பெறுவனவுகள் மற்றும் ஆண்டிற்குரிய வருமானம் வெவ்வேறாக இனங்காண்பதற்கு கணனி முறைமையில் வசதிகள் இல்லாமை காரணமாக கல்லூரி ஆரம்பத்திலிருந்து வருடாந்த பெறுவனவுகள் மற்றும் ஆண்டிற்குரிய வருமானம் மற்றும் பிற்போடப்பட்ட வருமானம் என்பவற்றை வெவ்வேறாக கணிப்பிட்டு சீராக்க குறிப்பு இடுவதற்கு நேர்ந்தமை |
| | (ii) பேரேட்டுக் கணக்குகளுக்கு உள்ளடக்கபடும் நாட்குறிப்பு பதிவுகளை சரியாக இனங்காணக் கூடிய வகையில் நாட்குறிப்புக்கள் தொடரொழுங்கில் இலக்கமிடப்படாமை |
| | (iii) கணக்கீட்டு மென்பொருள் நாளதுவரை யாக்கப்பட்டு பேணப்படாமை |

| | | |
|---|---|---|
| (ஆ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று நாளதுவரையாக்கப்பட்டு பதிவேடொன்று பேணப்படாமை. |
| (இ) | களஞ்சியக் கட்டுப்பாடு | பொருட் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு பராமரிக்கப்படாமை. |
| (ஈ) | உள்ளகக் கட்டுப்பாடு | முறையான வேலைப் பகிர்வு முறைமை யொன்று காணப்படாத காரணத்தினால் பணத்தைப் பொறுப்பேற்றல் மற்றும் கணக்கீடு செய்தல் என்பன ஒரே நபரினால் மேற்கொள்ளப்பட்டிருந்தமை. |